# பாடசலை ஆரம்பம்+ எல்லாபிள்ளைகளுக்கும் ஒரே மாதிரியான சந்தர்ப்பம்

சிறிய முயற்சி – பெரிய பலன்

## ஏன் இந்த திட்டம் செய்யப்படுகிறது?

வளர்ப்புமுறை பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையையும் தகுதியையும் சமுதாயத்தில் வழங்குகிறது. அத்துடன் வாழ்க்கையில் ஒரு நல்ல நிலைக்கு வழிநடத்தி செல்லவும் உதவுகிறது..

வேறுபட்ட நாட்டவர்களும் இனத்தவர்களும் அவர்களுக்கென்று வேறுபட்ட வளர்ப்பு முறையையும் கல்வியையும் கொண்டது. இதேபோல் தான் சுவிஸ் நாட்டிலும் தனிப்பட்ட அவர்களுக்கென கல்வி வளர்ப்புமுறைகள். பெற்றார் ஆகிய உங்களுக்கு இது சம்பந்தப்பட்ட விபரங்கள் முழுமையாக தெரியாமலோ அல்லது குறைவாக தெரியும் சந்தர்ப்பத்தில் இது உங்கள் பிள்ளைகளின் வளர்ச்சிக்கு தடையாக இருக்கும்.

இப்பாடசாலை ஆரம்பதிட்டம் பொதுவாக சுவிசில் வாழும் வெளிநாட்டவர்களுக்கும் அவர்களது பிள்ளைகளுக்கும் இந்நாட்டு வளர்ப்புமுறை கல்விமுறையை எடுத்துக்காட்டுகிறது. அடிப்படை நோக்கம் எல்லாப் பிள்ளைகளுக்கும் சமவாய்ப்பை அளித்து சுவிஸ் பிள்ளைகளைப்போல சமவாய்ப்பை வழங்குவது.

கரிதாஸ் கிறபுண்டன் பாடசாலை ஆரம்ப திட்டத்தின் மூலம் வெளிநாட்டு பிள்ளைகளுக்கு அவர்களை சுவிஸ் பழக்க வழக்கங்களுடன் ஒத்துப்போவதற்கும் வளர்ப்புமுறை கல்விமுறையையும் அடிப்படையாக தெரிந்துகொள்வதற்கும் உதவுகிறது.

## பாடசாலை ஆரம்ப திட்டம் யாருக்காக நடத்தப்படுகிறது?

பாடசாலை ஆரம்பத்திட்டம் 0-9 வயதுவரை உள்ள வெளிநாட்டவர்களின் பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தப்படுகிறது.

**ஆரம்ப பாடசாலை திட்டம் எதை வழங்குகிறது?**

ஆரம்ப பாடசாலைத்திட்டம் சுவிசில் வளர்ப்புமுறையையும் கல்விமுறையையும் பிள்ளைகளுக்கு வழங்குகிறது. இதனால் பெற்றார்களே முக்கியமானவர்களாக இருப்பதால் அவர்களுக்கு வேண்டிய முக்கிய தகவல்களையும் வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்குகிறது. 1வது 2வது சந்திப்பில் பிள்ளைகளும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவர். இவ்வகுப்பில் நீங்களாகவே எல்லாம் புரிந்து கொள்வதற்கு தேவையான நேரமும் உங்களுக்கு ஏற்ற நிலையிலேயே வகுப்புக்களும் நடத்தப்படும்.

**உள்ளடக்கம்:**

- சுவிஸ் நாட்டினதும் கிறபுண்டன் மாநிலத்தினதும் வளர்ப்பு முறையும் கல்விமுறையும்
- பெற்றார்களிடம் இருந்து என்ன எதிர்பார்க்கப் படுகிறது? பெற்றார்களுக்கான சட்டஒழுங்குகளும் பொறுப்புக்களும் என்ன?
- சுவிஸ் நாட்டினது பரம்பரையான வளர்ப்புமுறையையும் கல்விமுறையையும் எடுத்துக்காட்டுகிறது.
- எப்படி பெற்றார் ஆகிய நீங்கள் உங்களுடைய பிள்ளைகளின் மேற்படிப்பு கல்வியை கற்பதற்கு உதவியாக இருப்பது?
- பொது அமைப்புக்களின் நடவடிக்கைகளையும் அமைப்புக்களையும் தெரிந்து கொள்ளுதல் அதாவது வளர்ப்புமுறை கல்விமுறை பிள்ளைகளின் சுகாதாரம் சம்பந்தப்பட்ட அமைப்புகள்.(ஆரம்ப விளையாட்டுப்பாடசாலை பாலர்வகுப்பு பாடசாலைகள் குழந்தைகளை பராமரிக்கும்இடங்கள் ஆலோசனை நிறுவனங்கள் பாடசாலைபல்வைத்தியம் மற்றும் )
- என்ன பிரயோசனமான பொழுது போக்குகளை செய்வது?
- வெளிநாட்டவர்கள் ஒருவரோடு ஒருவர் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு வழிவகுத்தல்